

விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றினார். கூட்டத்தில் அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ., டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், டி.என்.முருகன், இரா.கற்பகம், எம்.தேன்மொழி, டி.செல்வராஜ், கோ.பாஸ்கரன், அப்துல் சலாம் மற்றும் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். தயா.இளந்திரையன் நன்றியுரையாற்றினார்.



நாமக்கல், PGP கல்லூரி அரங்கில், அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மா.மதிவேந்தன் ஆகியோர் நாமக்கல் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 200 பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், மாவட்டக் கழகச் செயலாளர் மதுரா செந்தில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் எஸ்.உமா, முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### அரியலூர் மாவட்டத்தில்

# 9030 பயனாளிகளுக்கு ரூ.50.86 கோடி கடன் உதவி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், செப். 14 -

அரியலூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன், சுழல் நிதி மற்றும் வட்டார வணிக வள மைய கடனுதவி வழங்கும் விழாவில் 9,030 பயனாளிகளுக்கு ரூ.50.86 கோடி மதிப்பில் கடன் இணைப்புகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் மதுரையில் தொடங்கி வைக்கப் பட்ட தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2,735 கோடி வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழா நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 9,030 பயனாளிகளுக்கு ரூ.50.86 கோடி மதிப்பிலான கடன் இணைப்புகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் ஊரக பகுதியில் 5,369 மகளிர் சுய உதவிக் குழுக்களும் நகரப்பகுதியில் 727 மகளிர் சுய உதவிக்குழுக்களும் ஆக கூடுதல் 6,096 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 72,942 சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் 2024-2025ஆம் ஆண்டு ஊரக மற்றும் நகரப்பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி நேரடி கடன் 6,359 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.521 கோடி இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் தற்போது வரை 2,210 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.164.49 கோடி இலக்கீடு அடைய பெற்றுள்ளது.

அதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 600 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 8,135 பயனாளிகளுக்கு ரூ.46.62 கோடி மதிப்பிலான வங்கி நேரடி கடன் தொகையும், 6 ஊராட்சி/பகுதி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்த 790 பயனாளிகளுக்கு ரூ.4.02 கோடி பெருங்கடனும், 13 மாற்றுத்திறனாளி (மற்றும்) முதியோர் குழுக்களில் 65 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் சுழல்நிதியும், மற்றும் வட்டார வணிக வள மைய தொழில் கடன் 33 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் என ஆக மொத்தம் 9,030 பயனாளிகளுக்கு ரூ.50.86 கோடி கடன் இணைப்புகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

தொடர்ந்து, அரியலூர் வட்டார சுய உதவிக்குழு கூட்டுறவு சங்கம் மற்றும் ஜெயங்கொண்டம் வட்டார சுய உதவிக் குழு கூட்டுறவு சங்கம் ஆகிய இரு சுய உதவிக்குழுக்கு புதிய கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

### திருச்சி கழக அலுவலகத்தில்

# "கலைஞர் என்றொரு காவியம்" நூல்!

## அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்டார்!

திருச்சி, செப். 14-

திருச்சி தில்லைநகரில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் கலைஞர் என்றொரு காவியம் நூல் வெளியீட்டு விழா பதிப்பகத்தின் உரிமையாளர் செந்தலை நெப்போலியன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே. என். நேரு அவர்கள் கலைஞர் என்றொரு காவியம் நூலை வெளியிட திரைப்பட இயக்குனர் எஸ்.ஏ. விஜயகுமார் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளரும், மாநகர மேயருமான அன்பழகன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் கலந்து கொண்டனர்.

பின் நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு...

கலைஞரின் புகழ் மக்களிடம் சென்று சேர இந்த நூல் நிச்சயம் வழிகாட்டும். அதற்கு காரணம் கலைஞர் அனைவருக்குமான ஒரு பல்கலைகழகமாக இருப்பவர். அவர் எப்படி சுயம்புவாக இருந்து திராவிட முன்னேற்ற கழகம் உயிர்த்தெழச் செய்தாரோ, அதே போல் கொண்ட கொள்கையில் இறுதி மூச்சுவரை நிலைத்து நின்றவர் கலைஞர். தமிழ்ச் சமுதாயத்தினருக்கு தமிழன தலைவர் கலைஞர் தான், அவரைப் பற்றி அநேக நூல்கள் வெளிவந்துள்ளது. கலைஞரின் கடிதங்களே 5 பாகங்களாக வெளி வந்துள்ளது. மேலும் அவருடைய புகழை பரப்பவும், அவருடைய செயல்களை இளைஞர்கள் கற்றுக்கொள்ளவும் நிச்சயம் இந்த நூல்கள் உதவும். லட்சக்கணக்கில் சம்பளம் வாங்குபவர்கள் சமுதாயத்தில் அக்கறை உள்ளவர்களாக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என பேசினார்.


